இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 313 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 09 – திங்கள்கிழமை 23 ஜூன் 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 313 : Thiruvalluvar Year - 2056 - Aani 09 - Monday 23 June 2025 - Madurai 12 Pages ₹ 5.00


## கலைஞரின் கனவு படைப்பான வள்ளுவர் கோட்டத்தை புதுப்பொலிவுடன் மீட்டெடுத்துள்ளோம்! – இது உங்களுக்கான அரசு!

# சமூக நீதி - சமத்துவம் - சமதர்மத்தை காக்கும் திராவிட மாடல் அரசு!

## புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்புக்குழு நடத்திய நன்றி பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜூன் 23 -**

**ரூ.80 கோடியில் புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு நடத்திய நன்றி பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், முத்தமிழறிஞர் கலைஞரின் கனவு படைப்பான வள்ளுவர் கோட்டத்தை புதுப்பொலிவுடன் மீட்டெடுத்துள்ளோம் எனவும், திராவிட மாடல் அரசு என்றால் சமூக நீதி - சமத்துவம் - சமதர்மம் - சகோதரத்துவத்தை காக்கும் அரசு எனவும் மாற்றுத் திறனாளிகளான உங்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றுவேன் எனவும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.6.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி, சமூக நீதியை நிலைநாட்டியதற்காக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நடைபெற்ற நன்றி பாராட்டும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இன்று எனக்கு உணர்ச்சிப்பூர்வமான நாள். இந்த விழாவிற்காக மட்டுமல்ல; இந்த இடத்திற்காகவும் நான் உணர்ச்சி வசப்படுகிறேன். உங்களுக்கெல்லாம், மாற்றுத்திறனாளிகள் என பெயர் வைத்த தாய் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தப் பெருமைமிகு வள்ளுவர் கோட்டத்தில் இந்த விழா நடைபெறுகிறது. நீங்கள் எல்லாம் இணைந்து இந்த பாராட்டு விழா நடத்துவதில் மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகிறேன்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.6.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கி. சமூக நீதியை நிலைநாட்டியதற்காக மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் நடைபெற்ற நன்றி பாராட்டும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு. மு.பெ.சாமிநாதன், திருமதி. பி.கீதாஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன். மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன். சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் மற்றும் டிசம்பர் 3 இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் தீபக் நாதன், தேசிய மாற்றுத்திறனாளிகள் இணையத்தின் தலைவர் அர்மான் அலி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் ரெ.தங்கம், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சிம்மச்சந்திரன், தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைகளுக்கான சங்கத்தின் நிர்வாகி திருமதி ஜான்சி ராணி, தேசிய பார்வையற்றோர் இணையத்தின் தலைவர் மனோகரன், தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத்திறனாளர் நல்வாழ்வு சங்கத்தின் தலைவர் கோபிநாத், மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகி ஜோதிபாசு உள்ளிட்ட பல்வேறு மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கங்களின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றுவேன்!

**திருக்குறள் மீது தீராத காதல் கொண்ட கலைஞர்!**

தலைவர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரை, திருவள்ளுவர் மீதும், திருக்குறள் மீதும் தீரா காதல் கொண்டவர்; திருக்குறளைத் தூக்கிச் சுமந்து பரப்பினார்! பொதுப்பணித் துறை அமைச்சராகவும், போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் இருந்தபோது அரசுக் கட்டடங்களில் திருவள்ளுவர் படம் வைத்தவர்; திருக்குறளை எழுதச் சொன்னவர்! பேருந்துகளில் குறளை இடம்பெற செய்தவர்!

1971ல் முதலமைச்சராக தமிழறிஞர்கள் கணித்த திருவள்ளுவர் ஆண்டை அரசாணையாக வெளியிட்டவர்! வள்ளுவரை தமிழ்ச் சமூகம் வானளாவ போற்ற வேண்டும் என்ற இந்திய நாடு தொடங்கும் குமரி முனையில் சமத்துவத்தை வலியுறுத்திய வள்ளுவருக்கு வானுயர சிலை அமைத்தவர்! அந்தச் சிலையின் வெள்ளி விழாவையும் நாம் கொண்டாடினோம்!

**அய்யன் வள்ளுவருக்கு கலைஞர் சூட்டிய புகழ் மாலை!**

இப்படி, வள்ளுவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் சூட்டிய புகழ்மாலைகளில் மிக முக்கியமானது, 1974ல் அவர் அடிக்கல் நாட்டிய இந்த வள்ளுவர் கோட்டம்! திருவள்ளுவர் சிலையும், திருவாரூர் தேரும் அமைந்துள்ள இந்தக் கோட்டம், தலைவர் கலைஞரின் கனவுப் படைப்பு!

**அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் ஆகியோரை வாழ்த்துகிறேன்!**

இந்தக் கலைக் கருவூலத்தைதான் நாம் இப்போது 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்திருக்கிறோம்! பொதுவாக, தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்ட திட்டங்கள் என்று சொன்னால், அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் போட்டுவிடுவார்கள். நாம் உருவாக்கிய கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை பராமரிக்காமல் விட்டுவிடுவார்கள். அப்படி கவனிப்பார் இல்லாமல் இருந்த இந்த வள்ளுவர் கோட்டத்தை, இப்படி புதுப்பொலிவோடு மீட்டெடுத்து இருக்கிறோம்! அதை செய்து காட்டிய பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

**“முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்” என்று சொன்னார் வள்ளுவர். முயற்சி செய்தால் எதுவும் முடியும் என்பதை உண்மையில் நிரூபித்து வருகிறவர்கள் மாற்றுத் திறனாளிகள்தான். உங்களுக்கு நான் சொல்வது, உங்களுக்கு நான் இருக்கிறேன்; இந்த அரசு இருக்கும் என்கின்ற நம்பிக்கையுடன் செயல்படுங்கள். உங்களுக்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவது என்னுடைய கடமை!**

தலைநகர் சென்னையின் மைய மண்டபமாக ஆயிரத்தி 400 பேர் அமரக் கூடிய மாபெரும் கூட்ட அரங்கத்தோடு அமைந்திருக்கின்றது. இந்த தமிழ்க் கோட்டத்தை எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்! பாராட்டுக்காக நான் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுக்கவில்லை. உங்கள் அன்புக்காகதான் நான் பங்கெடுத்திருக்கிறேன்!

இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்த நம்முடைய மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு என்னுடைய

**தொடர்ச்சி 4ஆம் பக்கம்**

## 1000க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு!

# ரூ.4,302 கோடியில் ஓலா செல் டெக்னாலஜி நிறுவனம்!

## கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் அமைகிறது!

சென்னை, ஜூன் 23 -

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கான உகந்த சூழ்நிலை உள்ள காரணத்தால் மேலும் மேலும் தொழில் முதலீடுகளுடன் தொழில் நிறுவனங்கள் வந்த வண்ணம் உள்ளன.

அந்த வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் ரூ.4,302 கோடி முதலீட்டில் 1000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வண்ணம் ஓலா செல் டெக்னாலஜி நிறுவனம் வர இருக்கிறது.

இதுகுறித்த விவரம் வருமாறு:-

**ரூ.4,302 கோடியில் ஓலா செல் டெக்னாலஜிஸ் ஆலை விரிவாக்கம்!**

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 4 ஆயிரத்து 302 கோடியில் ஓலா செல் டெக்னாலஜிஸ் தனது ஆலையை விரிவாக்கம் செய்ய, தமிழ்நாடு அரசிடம் விண்ணப்பித்துள்ளது.

தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி அமெரிக்க டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இலக்கு நிர்ணயித்துள்ளார்.

இதற்காக பல்வேறு முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு முதலீடுகளை குவித்து வருகின்றன.

இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 4 ஆயிரத்து 302 கோடி ரூபாயில் ஓலா செல் டெக்னாலஜிஸ் தனது ஆலையை விரிவாக்கம் செய்ய உள்ளது.

அதன்படி, சிப்காட் பர்கூர் பூங்காவில் ஓலா செல் டெக்னாலஜிஸ் தனது ஆலையை விரிவாக்கம் செய்ய, தமிழ்நாடு அரசிடம் விண்ணப்பித்துள்ளது. ஏற்கனவே, 998 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலைக்கான முதல்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது முழுமையாக கட்டுமான பணிகளை மேற்கொள்ளும் வகையில் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய ஓலா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

ஓலா நிறுவனத்தின் இந்த தொழிற்சாலை விரிவாக்கம் மூலம் கூடுதலாக 3 ஆயிரத்து 850 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம்

# ரயில் நிலையத்தில் அதிகரித்து வரும் ‘இந்தி’ பயன்பாட்டை தவிர்ப்பீர்!

## ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு ஆ.இராசா எம்.பி. கடிதம்!

*நீலகிரி, ஜூன் 23-*

நீலகிரியில் உதகமண்டலம் ரயில் நிலையத்தில் அதிகரித்து வரும் இந்தி பயன்பாடு குறித்து ஒன்றிய ரயில்வேத் துறை அமைச்சர் அஷ்விங்கிக்கு ஆ.இராசா எம்.பி. எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

ரயில் நிலையத்தில் அதிகரித்து வரும் இந்தி பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தவே நான் எழுதுகிறேன், இது பரவலான கவனத்தையும் எதிர்ப்பையும் தூண்டியது.

எனது தொகுதியான நீலகிரியில், உதகமண்டலம் ரயில் நிலையம் 100 ஆண்டுகளுக்கும் மேலானது.



அமிர்த பாரத் திட்டத்தின் கீழ், நிலையத்தை மேம்படுத்தும் பணிகள் செயல்பாட்டில் உள்ளன. 90% பணிகளை மட்டுமே முடித்த நிலையில், தமிழ் மக்களின் உணர்வுகளைப் பாதித்த சுவரில் பதாகைகள் உள்ளன.

தமிழ்நாடு மொழி அடையாளம் மற்றும் கலாச்சார சுயாட்சியின் நீண்ட மற்றும் பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டுள்ளது. நமது பிராந்தியத் தேவைகள் மற்றும் வரலாற்று சூழலுக்கு ஏற்ப இரு மொழிக் கொள்கையை நமது மாநில மக்கள் தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர்.

உதகமண்டலம் ரயில் நிலையத்தில் சமீபத்தில் நடந்த செயல் மொழியியல் திணிப்பாகக் கருதப்படுகிறது. பொது இடங்களில் இந்தி மொழியை ஊக்குவிப்பது உள்ளூர் மக்களின் மொழியியல் தேவைகளிலிருந்து துண்டிக்கப்பட்டதாக உணர்கிறது மற்றும் இது ஒரு அரசியல் கூற்றாகக் கருதப்படுகிறது. ரயில் நிலையத்தில் மதன் மோகன் மாளவியாவின் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கோள் முதலில் தமிழ் கவிஞர் மகாகவி பாரதியால் கூறப்பட்டது.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழக மக்களின் மொழி உணர்வுகளை மதிக்கவும், சூழல் ரீதியாக அவசியமில்லாத இடங்களில் இந்தி மொழியை கட்டாயமாகச் சேர்ப்பதைத் தவிர்க்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த பதாகைகளை அகற்ற அதிகாரிகளுக்கு நீங்கள் உத்தரவிட முடிந்தால் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. தனது கடிதத்தில் கூறியுள்ளார்.